**திருக்கோவில் பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திருக்கோவில் பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திருக்கோவில் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக பெறவேண்டிய 03 தனியார் தொலைத்தொடர்புக் கோபுரக் கட்டணம் மற்றும் 05 விளம்பரப் பதாதைகள் ஆகியவற்றின் கூட்டுப்பெறுமதி ரூபா 486,150 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தியான ரூபா 1,570,718 பெறுமதியான பாதுகாப்பு அறை கட்டிடத்தின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 3,380,923 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,392,084 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மறுக்கப்பட்டிருந்த ரூபா 100,240 பெறுமதியான காசோலை தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதிவரை காசேட்டில் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு உண்மையான காசு மீதி கண்டறிவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக்கான கணக்கறிக்கையில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசேட்டில் தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு உண்மையான காசு மீதி கண்டறிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மூன்று வருடங்களுக்கும் மேலாக விளைவற்றுக் காணப்படும் 03 வங்கி நடப்புக் கணக்குகளின் மொத்த தொகையான ரூபா.3,960,887 மீதிகள் வருமானம் உழைக்கும் மூலங்களில் முதலீடு செய்யப்படவில்லை. | வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை ஈட்டக் கூடிய வகையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 6,000 | - | - | - | 1,000 | - | - | - |
| (ii) | வாடகை | 2,565,000 | 6,736,598 | 3,467,415 | 3,269,183 | 5,720,000 | 6,346,537 | 3,559,851 | 2,786,686 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 810,000 | 505,225 | 505,225 | - | 740,000 | 470,890 | 505,225 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,758,000 | 2,895,269 | 2,895,269 | - | 3,829,000 | 2,803,673 | 2,895,269 | - |
| (v) | கூட்டுத் தொகை | 7,139,000 | 10,137,092 | 6,867,909 | 3,269,183 | 10,290,000 | 9,621,100 | 6,960,345 | 2,786,686 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலிலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 1,809,914 ஆக இருந்தது. அதில் ரூபா 752,388 தொகை 03 வருடம் முதல் 06 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வீச்சில் அறவிட வேண்டியதாக இருந்ததுடன் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 510,682 தொகையாக இருந்தது. | நிலுவை அறவீடுகள் காலத்திற்கு காலம் அறவிடப்பட்டு வருகின்றன. | அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) தொலைத் தொடர்பு கோபுரக் கட்டணம்** | | |
| சபையினால் அறவிடவேண்டிய ரூபா 105,000 தொகையான தொலைத் தொடர்புக் கோபுர கட்டணங்களினை 2017 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலத்தில் நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய வருமானங்களை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ) முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 2,596,600 ஆகும் | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அறவிட வேண்டிய வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் ரூபா 5,000,000 செலவில் விநாயகபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட மீனவர்களுக்கான பொதுச் சந்தைக் கட்டிடம் கடந்த 03 வருடங்களுக்கு மேலாக பயன்பாடற்று காணப்பட்டிருந்தது. | வருமானம் ஈட்டக் கூடிய வகையில் அதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. | மிக விரைவாக அதனைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் சேதனப்பசளை உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் வழங்கப்பட்ட ரூபா 500,000 மற்றும் ரூபா 690,000 தொகை சபை நிதிப் பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இயந்திரத்தினை பயன்படுத்துவதற்கு கணக்காய்வுத் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அவற்றுக்கான கேள்வி அதிகரிக்கப்படும் பட்சத்தில் அவ் இயந்திரங்கள் பூரணமாக பயன்படுத்தப்படும். | இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தாண்டியடியில் புதிதாக அமைக்கப்படும் சேதனப்பசளை உற்பத்தி நிலையத்திற்காக ரூபா 1,607,000 பெறுமதியான பிளாஸ்டிக் கட்டர் மற்றும் மரம் அரியும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுத் திடலில் அதனை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இயந்திரங்களை மிக விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மண்டானை திண்மக்கழிவு நிலையத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் குப்பைகளினை வெட்டி அரியும் இயந்திரம் 03 வருட காலமாக பழுதடைந்திருந்தும் அதனை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ் நிலையத்தில் பேப்பர் தயாரிக்கும் இரண்டு பொறி இயந்திரங்கள் பல வருட காலமாக இயங்காமல் காணப்பட்டிருந்ததுடன், அதனை மீள பயன்படுத்தக்கூடிய வகையில் திருத்தம் செய்து வாடகைக்கு | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிக விரைவாக திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையில் காணப்படும் 09 வாகனங்களினை மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதி கிடைக்கும் பட்சத்தில் திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையில் கடன்பெற்று இறந்த, ஓய்வுபெற்ற மற்றும் பதவியை விட்டுச்சென்ற 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 1,019,458 கடன் நிலுவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடவேண்டிய நிலுவைத் தொகையினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டு காலப்பகுதியில் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெறவேண்டிய 61 நிறுவனங்கள் காணப்பட்டிருந்த போதிலும் 23 நிறுவனங்களுக்கு மாத்திரமே சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட விதிகளின் பிரகாரம், சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |